# தூதன்

தூதன்-26 செப்டம்பர் 2017 தூது-8

ஜனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள் முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள்; மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் மறைவையும் விட்டுப்புறப்படுவார்களாக. யோவேல் 2:16

## நமது கிரியைகள் நீதியை உருவாக்குவதில்லை மாறாக, கிறிஸ்துவுக்குள் நமது நீதியே கிரியைகளை உருவாக்குகிறது.



Private Circulation only

தென் இந்திய திருச்சபை தமிழ் சபை - துபாய்

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 08 |
| உதவி ஆயரம்மா மடல் | 10 |
| செயலர் மடல் | 12 |
| ஆராதனை பாடல்கள் | 14 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 15 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 16 |
| கரடி | 18 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| Young Reader's Column | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| Summer Camp 2017 | 26 |
| Health Tips | 28 |
| Harvest Festival Weekly Sales | 31 |
| Birthday Celebrants | 32 |
| Wedding Anniversary Celebrants | 35 |
| Who is Zerubbabel | 39 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

## சீர்திருத்தத் திருச்சபை - ஐந்நூற்றாண்டு விழா
(Quincentennial of Reformation 1517-2017)

ஏனெனில் “நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால் வாழ்வடைவர்” என மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா! இவ்வாறு மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்கும் கடவுளின் செயல் நற்செய்தியாய் வெளிப்படுகிறது. தொடக்க முதல் இறுதிவரை இந்தச்செயல் நம்பிக்கையின் அடிப்படையில்தான் நிகழ்கிறது. (ரோமர் 1:17).

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே,

விண்ணையும் மண்ணையும் சீர்பொருத்திய சிலுவைநாதர் இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள். செப்டம்பர் மாதத்தில் ஆசிரியப் பெருமக்களின் திருப்பணியையும், மூத்த குடிமக்களின் நல்வாழ்வையும் நினைவுகூறுகிறோம். அத்துடன் திருச்சபை வரலாற்றின் சீர்திருத்தச் செம்மல் மார்ட்டின் லூத்தர் அவர்களையும் நினைவு கூறுகிறோம். அகில உலக சீர்திருத்தத் திருச்சபை தனது ஐந்நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது. நம் தாய்த்திருச்சபையாம் தென்னிந்தியத் திருச்சபை தனது 70-வது அகவையை நிறைவு செய்கிறது. திருமறையை அனைவரின் கரங்களிலும் அளித்து, பாவமன்னிப்பை மனந்திரும்பும் அனைவருக்குமுரிய நேரடியான இறை அனுபவமாக மாற்றி, கிருபையினால் மட்டுமே அனைவருக்கும் மீட்பு என்ற பேருண்மைகளை வெளிப்படுத்தி சான்று பகரும் சீர்திருத்தத் திருச்சபையின் பற்றுமையாளர்களாய் இப்பண்டிகையைக் கொண்டாடுவோம்.

**சீர்திருத்தத் தந்தை மார்ட்டின் லூத்தர் (Martin Luther - Father of Reformation) :** ஜெர்மனி நாட்டில் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டு வந்த ஒரு குடும்பத்தில் பிறந்து, சட்டத்தையும், தத்துவத்தையும், இறையியலையும் ஆழமாகக் கற்ற ஓர் அறிஞர் மார்ட்டின் லூத்தராவார். தத்துவப்படிப்பு இறைவனைப் பற்றிய ஆழமான ஈர்ப்பையும், புரிதலையும் தர இயலாததால், இறையியலை ஆழமாகக் கற்க ஆரம்பித்தார். பவுல் அடிகளாருக்கு ஏற்பட்டதுபோல சடுதியில் இவரது அருகில் மின்னல் ஒன்று வெட்டி, இடி தாக்கியது. இவருக்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை. இந்நிகழ்வு “இறைவனின் திருக்கரத்தின் பாதுகாப்பு” என்று உணர்ந்த லூத்தர் மரணம் மற்றும் நியாயத்தீர்ப்பு பற்றிய தெய்வபயத்தை தன்னுள்ளே கொண்டு சமயத்துறவியாக (monk) தன் வாழ்வை அர்ப்பணித்தார். அகுஸ்தீனியத்துறவு முறையைத் தழுவினர்.

உபவாசம், இறைவேண்டல், புனிதப்பயணம் போன்றவைகளில் அதிக கவனம் செலுத்தினார். தன் பாவங்களை அதிகம் உணர்ந்தவராகவும், ஆன்மீகத் தாகம் அதிகம் கொண்டவராகவும் காணப்பட்ட மார்ட்டின் லூத்தர் கிறிஸ்துவைப் பற்றிய தேடலைத் தன்னகத்தே இன்னமும் அதிகப்படுத்திக் கொண்டார். வெறும் சடங்காச்சாரமான செயல்பாடுகள் ஆன்மீக வளர்ச்சிக்கும், நிறைவான மீட்பிற்கும் உதவாது எனவும், உண்மையான மனந்திரும்புதலும், சுயநீதியற்ற தேவநீதியினால் உண்டாகும் இறையருளுமே பாவமன்னிப்பையும், புது வாழ்வையும் வழங்கமுடியும் என்றும் உள்ளுணர்வு பெற்றார். இறையியலில் முனைவர் பட்டம் பெற்று, ஜெர்மனியின் விட்டன்பர்க் பல்கலைக்கழகத்தின் இறையியல் பேராசிரியராகவும், பல புனித மடங்களை மேற்பார்வையிடும் பொறுப்பாளராகவும், விட்டன்பர்க் திருச்சபையின் போதகராகவும் விளங்கினார்.

1516-ம் ஆண்டு ரோம் நகரில் உள்ள (வத்திக்கான்) புனித பேதுரு அடிகளாரின் பேராலயத்தை (St. Peter's Basillica) மறுகட்டுமானம் செய்ய ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை பாவமன்னிப்புச்சீட்டு (indulgences) விற்பனையை அதிகரித்தது. அச்சீட்டின் வழியாக திருச்சபையின் நற்காரியங்கள் நிறைவேற்றப்படுகின்றன எனவும், அது வெறும் நிதியாக மட்டுமின்றி ஒரு விசுவாசிக்குப் பாவமன்னிப்பையும், புதுவாழ்வையும் வழங்கும் வாய்க்காலாக விளங்குகிறது எனவும் ரோமத் திருச்சபை நம்பியது. இது லூத்தருக்கு அதிக வேதனையையும், கேள்வியையும் எழுப்பியது. 1517-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் நாள் இதனை எதிர்த்து தனது விட்டன்பர்க் ஆலயக் கதவுகளிலே "95 கட்டுரைகளை" (Ninety five theses) லூத்தர் வெளியிட்டார். இறைவனின் சித்தத்தின்படியேயல்லாமல் வேறு எந்த அடிப்படையிலும் பாவமன்னிப்பை விலை கொடுத்து வாங்கமுடியாது எனவும், சுயநீதியினால் சம்பாதிக்க முடியாது எனவும் லூத்தர் தனிமனிதராக ஆணித்தரமாக நின்றார் (Here I stand). கத்தோலிக்கத் திருச்சபை அவரைச் சபை விரோதி (heretic) என்று முத்திரையிட்டுச் சபை விலக்கியது. அரசு சிறையிட்டது. ஆனாலும் அவரது 95 கோட்பாடுகள் இரண்டே நாட்களில் ஜெர்மனி தேசம் முழுவதும் பரவியது. இதுவே கிளர்ச்சி இயக்கமாக (Protestant movement) மாறி, சீர்திருத்தத் திருச்சபைக்கு அடிகோலியது. ஐரோப்பாவின் பல நாடுகளிலும் குறிப்பாக இங்கிலாந்து, ஸ்விட்சர்லாந்து, பிரான்ஸ் போன்ற பெரிய தேசங்களிலும் லூத்தரின் சிந்தனைகளும், ஆழ்ந்த விசுவாசக் கோட்பாடுகளும் ஆயிரமாயிரம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்பட்டன.

## மூன்று வாய்ப்பாடுகள் (Three formulae)

1. விசுவாசத்தினால் மட்டுமே மீட்பு (Sola fide): லூத்தர் குறிப்பிடும் வசனம் ரோமர் 1:17. விசுவாசம், சுயநீதிக் கிரியைகளால் அல்ல, கிறிஸ்துவின் கிருபையினால் மட்டுமே கிடைக்கும். ஆழமான விசுவாசத்தை கிறிஸ்து என்னும் நற்செய்தியில் ஒருவர் கொண்டிருக்கவேண்டும். பாவமன்னிப்பின் அதிகாரம் கிறிஸ்துவிடம் மட்டுமே உண்டு. எனவே, உண்மையான மனந்திரும்புதலோடு எந்த நபரும், திருச்சபையும், அரசும் ஜாக்கிரதையுடன் வாழவும், செயல்படவும் வேண்டும்.

2. இறையருளினால் மட்டுமே மீட்பு (Sola Gratia): கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது கடவுளுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல (எபேசியர் 2:8) என்ற பவுலடிகளாரின் கூற்றுப்படி, ஒருவருடைய மீட்பானது இறைவனின் கிருபையினால் மட்டுமே கிட்டும் என லூத்தர் போதித்தார்.

3. இறைவார்த்தையினால் மட்டுமே மீட்பு (Sola Scriptura): இறைவார்த்தை அனைவருக்கும் சொந்தமானது. அவ்வார்த்தைகளை வாசித்து, தியானித்து, கீழ்ப்படிந்து வாழ்வதன் மூலம் மீட்பை அடையலாம் என்று ஆழ்ந்து போதித்தது மட்டுமல்ல, திருமறையை இலத்தீன்(அரசு) மொழியிலிருந்து ஜெர்மானிய மொழிக்கு முதன்முதலில் மொழிபெயர்ப்பு செய்தார். இன்று உலகின் அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு பின்பற்றப்படும் வார்த்தைகள் திருமறையின் வார்த்தைகளே! திருச்சபையை வழிநடத்தும் சமயத்தலைவர்களிடம் மட்டுமல்ல, அனைவரிடமும் திருமறை காணப்படவேண்டும், சொந்தமாக்கப் படவேண்டும் என்று லூத்தர் அவர்கள் அன்று தொடங்கிய விசுவாசச் செயல் இன்று உலகளாவிய சீர்திருத்தத் திருச்சபையை உருவாக்கி, பல கோடி மக்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மீட்பை ருசிக்க உதவியுள்ளது என்றால் மிகையாகாது.

சீர்திருத்தத் திருச்சபையின் மிகப்பெரிய அங்கமாகவும், உலகத்தின் மிகப்பெரிய ஐக்கியத் திருச்சபையாகவும் விளங்குகின்ற நமது தென்னிந்தியத் திருச்சபை தனது 70வது பிளாட்டினம் ஆண்டுவிழாவைக் கொண்டாடுகிறது. நம் திருச்சபைக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்; இணைந்து கொண்டாடுவோம்; இறைவார்த்தை, திருவழிபாடு மற்றும் சபை ஒழுங்குகளுக்குக் கீழ்படிவோம்; இறைபக்தியில் பெருகுவோம்; இறைகிருபை பெறுவோம். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி,
சபை போதகர்.

## கிறிஸ்தவக் கல்வியும் வளர்ச்சியும்
## (Christian Education & Growth)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

நல்லாசிரியர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் புதிய மாத நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். **"நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன், உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்"** (சங்.32:8) என்ற வார்த்தையின்படி ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுகிற இந்த செப்டம்பர் மாதத்திலும் ஆண்டவரே நம்மை தம்முடைய வார்த்தையினாலும், ஆலோசனையினாலும், சிட்சையினாலும், போதனையினாலும், கிருபையினாலும், தயவினாலும் வழிநடத்துவாராக. நம் முன்மாதிரியான இயேசுகிறிஸ்துவின் வளர்ச்சி மற்றும் அதற்குத் தேவையான போதனைகளைப் பற்றி லூக்கா 2:52 அடிப்படையில் இக்கட்டுரையில் கவனத்துடன் பார்ப்போம்.

### நாற்பரிமாண கல்விமுறை (Four dimensional teaching):

**"இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்"**(லூக்கா 2:52). 'பெற்றோர்களே ஒரு குழந்தையின் முதல் ஆசிரியர்கள்' என்ற கூற்று உலக முழுவதும் அறியப்பட்டுள்ளது. ஆகவே ஆசிரியர்-பெற்றோர் என்பது இரண்டு வெவ்வேறு வேலைகள் அல்ல. மாறாக இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையது. கல்விக்கூடத்தில் ஒரு போதனையும், வீட்டில் ஒரு போதனையும் கொடுக்க இயலாது, கூடவும் கூடாது. ஆகவே, திருமறையின் வெளிச்சத்தில் நான்கு வகைகளில் போதனை அமையவேண்டும் என்பதை ஆண்டவர் இயேசுவின் வளர்ச்சியில் அறியலாம். அவர் ஒரு யூத பாரம்பரியத்தில் வாழ்க்கையைப் படிக்கிறார். யூத சமுதாயத்தில் 12 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் பொது இடங்களிலே வந்து பாடம் அல்லது நியாயப்பிரமாணம் கற்கமுடியாது. அதிலும் ஆண்பிள்ளைகள் 12 வயதில் கற்க அனுமதி உண்டு. ஆனால் பெண் பிள்ளைகளுக்கு வீடுதான் பாடசாலை. எந்த வயதிலும் பொது இடத்தில் பாடம் கற்க வரமுடியாது. யூத குருக்களையோ, ரபீக்களையோ நெருங்கி பின்பற்றி கற்றுக்கொள்ள பிள்ளைகளுக்குத் தடைகள் இருந்தன. அப்படிப்பட்ட சூழலிலும் பிள்ளையாகிய இயேசு நான்கு பரிமாணங்களில் கற்பிக்கப்பட்டு வளர்க்கப்பட்டார். அதைக்குறித்து விரிவாகக் காண்போம்.

### 1. ஞானத்தில் வளருதல் (Grow in Wisdom):

“ஞானம்” என்பது எது சரி எது தவறு என்பதை பொது நீதியுடன் இறைபயத்தில் நிதானிப்பதாகும். **“கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்”** என்ற வேத வார்த்தையின்படி கர்த்தருக்குப் பிரியமானதை, சித்தமானதை அறிந்து, உணர்ந்து, பேசுவதும் செயல்படுத்துவதுமே ஞானத்தின் அடிப்படையாகும். இதைக் கர்த்தர் ஒருவரே வழங்கக்கூடும். கடவுளுக்குச் சமமான ஞானத்தை மனிதன் எட்டிப்பிடிக்க முடியாது. ஆனால் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து பாவத்திற்கு விலகுவதால் ஞானத்தைப் பெறலாம். அத்தகைய ஞானம் உலக வாழ்க்கையில் நன்மை தீமையை பகுத்தறியவும், தீமைக்கு விலகி நன்மையைப் பின்பற்றவும் உதவும். இத்தகைய ஞானத்தில் இயேசு தன் பெற்றோர் மற்றும் பெரியோரால் போதித்து வளர்க்கப்பட்டதால்தான் அவர் சுயநலமாய் வாழாமல் நன்மை செய்கிறவராய் மாத்திரம் வாழ்ந்து பிதாவின் சித்தத்திற்குச் சிலுவை மட்டும் கீழ்ப்படிந்து கடவுளின் நோக்கத்தை நிறைவேற்றினார். ஆக ஞானமுள்ள போதனை ஓர் ஆன்மீக அறபோதனை (Wisdom teaching is spiritual ethical teaching).

### 2. சரீரத்தில் வளருதல் (Grow in physical Stature):

'A sound mind in a sound body' - ஒரு மனிதனுடைய எண்ணம் ஆரோக்கியமானதாக இருக்கவேண்டுமானால் அவன் உடலும் ஆரோக்கியமாக இருக்கவேண்டும். 1 கொரி.3:16,17-ன்படி நம்முடைய சரீரம் கடவுள் வாழும் ஆலயம். அப்படியானால் இச்சரீரத்தைக் கெடுக்கின்ற எந்தக் காரியத்தையும் செய்யாமல், சரீர நல்வளர்ச்சிக்கான போதனைகளைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து வளர்க்க வேண்டும். உணவுப் பழக்க வழக்கங்கள், வீட்டு வேலைகள், சமூக வேலைகள், நோன்பு போன்ற பல சரீர தொடர்பான காரியங்களை ஆண்டவர் இயேசுவிடம் நாம் பார்க்கலாம். 12 வயது சிறுவனாக நாசரேத்தூரில் தன் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து, தகப்பனுடைய தச்சு வேலைகளில் உதவி செய்து, உணவு உண்பதிலும், உபவாசத்திலும் ஒழுங்கைப் பின்பற்றி, பல பாடுகளுக்குப் பின்பும் சிலுவையிலே தன்னைப் பலியாக ஒப்புக்கொடுக்கின்ற அளவிற்கு இயேசு தம் சரீரத்தை ஆரோக்கியமாக வைத்திருந்தார். அவர் உயிரைக்கூட யாராலும் எடுக்கமுடியவில்லை; தாமாகவே கொடுத்தார். நீண்ட நேரம் போதித்தார்; வெகுதூரம் நடந்தார். ஓய்வு, உறக்கம் அதிகம் எடுத்தவர் என்று சொல்லப்படாவிட்டாலும் தன் சரீரத்தை மிகவும் பெலமுள்ளதாய் வைத்திருந்தார். ஆகவே வளர்ச்சி பற்றிய போதனை என்பது நமது உடலை கட்டுப்பாட்டுடனும், நலத்துடனும் வைத்திருப்பதாகும். (Stature teaching is about physical health).

### 3. தேவ கிருபையில் வளருதல் (Grow in the favour of God):

பிதாவாகிய கடவுளோடு கொண்டுள்ள உறவை என்றைக்கும் கைவிடாதவராக ஆண்டவர் இருந்தபடியினால் கடவுளுடைய கிருபை அவருடைய வாழ்வின் எல்லா நிலைகளிலும் இருந்தது. அதற்காக அவர் நல்லதொரு ஆன்மீக ஒழுங்கைக் கடைபிடித்தார். தவறாது ஜெபிப்பதிலும், போதிப்பதிலும் மாத்திரமல்ல, தேவையிலுள்ளோருக்காக அதிசயங்களையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் அவர் செய்ததும் தேவகிருபையினால் மாத்திரமே. ஆகவே அக்கிருபை ஒருவரின் தனிப்பட்ட சுய ஒழுங்கிற்கும், அவரது கரிசனை சேவைகளுக்கும் அடிப்படையானது. இவ்விரண்டில் ஒன்றை மாத்திரம் பெற்று மற்றொன்றை விட்டுவிட முடியாது. நோயுற்றோரைக் குணமாக்கி, இறந்தோரை உயிருடன் எழுப்பி, இல்லாதவருக்கு உணவு அளித்து, பிசாசுகளைத் துரத்தி இயேசு செய்த எண்ணற்ற அற்புதங்கள் தேவ கிருபையின் போதனையாகும். (Teaching about the favour of God will help the child to grow in self discipline and compassionate service).

### 4. மனிதர் தயவில் வளருதல் (Grow in favour of humans):

கடவுள் என்னோடு இருக்கிறார். ஆகவே எந்த மனிதனுடைய தயவும் எனக்குத் தேவையில்லை என்கிற போதனை நல்வளர்ச்சிக்கு உதவாது; அது அழிவையே ஏற்படுத்தும். ஆகவே இயேசுவுக்குக் கிடைத்த முதல் மனிதர் தயவு அவரது பெற்றோர். அவர்கள் வழியாக நல்ல குடும்ப உறவை அவர் பெற்றார். ஊழியத்தில் அவமானங்கள் வந்தபோது அதைப் பொறுக்கமாட்டாமல் அவரை வீட்டிற்கு அழைத்துவர விரும்புகின்ற சகோதர சகோதரிகளைப் பெற்றார். நிச்சயமாக நல் ஆசிரியர்களின் தயவு அவருக்கு இருந்திருக்க வேண்டும். ஆகவேதான் ஒரு சிறந்த போதகரானார். பல ஆண்-பெண் சீடர்களின் உறவும், அவரது ஊழியத்திற்குத் தேவையாயிருந்தது. மக்களோடு அவர் கொண்டிருந்த உறவும் ஆச்சரியமானது. சுய நீதியுள்ளவர்களைக் கண்டித்து திருத்த விரும்பினார். கைவிடப்பட்டவர்களை, மனம்திரும்பியவர்களை மன்னித்து ஏற்றுக்கொண்டார். ஒதுக்கப்பட்ட இடங்கள் என்று கருதப்பட்ட வீடுகளுக்கும், ஊர்களுக்கும் சென்று உறவை ஏற்படுத்தினார். ஆகவே மனிதர் தயவுக்கான போதனை பிள்ளைகளுக்கு மிகவும் முக்கியமானது. பெற்றோர், உறவினர், உடன் ஊழியர், வலியவர், எளியவர் ஆகிய அனைவரின் நண்பரானார் இயேசு. (Teaching about the favour of man will help one to develop family and social relationships)

இந்த நாற்பரிமாணங்களிலும் நாமும் வளர்ந்து நம்முடைய பிள்ளைகளையும் வளர்க்க ஆண்டவர் கிருபை செய்வாராக! ஆமென்!!

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர், ஆயரம்மா,
பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

# உதவி போதகர் மடல்

## வாக்குத்தத்த செய்தி

நீ இனிக் கைவிடப்பட்டவள் என்னப்படாமலும், உன் தேசம் இனிப் பாழான தேசமென்னப்படாமலும், நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும்; கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்; உன் தேசம் வாழ்க்கைப்படும். ஏசாயா 62:4

தம்முடைய வாக்கினால் சொன்னதை தம் கரத்தினால் நிறைவேற்றுகிற நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

இஸ்ரவேலர்கள் பாபிலோனியருக்கு அடிமைப்பட்டுப் போனதால் இஸ்ரவேல் தேசத்தைச் சுற்றியிருந்த ஜனங்கள் அவர்களைக் குறித்து, இஸ்ரவேலரைக் கர்த்தர் கைவிட்டுவிட்டார், இனி அவர்களின் நிலை பாபிலோனில் இருப்பதுதான், அவர்களின் அலங்காரம் போயிற்று, தேசம் அக்கினியினால் பாழாய் போனது. இஸ்ரவேல் விழுந்தது என்றெல்லாம் சொன்னார்கள். அச்சூழ்நிலையின்போது, தேவன் அருளின வாக்குத் தத்தமே: இனி எப்சிபா என்றும், பியூலா என்றும் அழைக்கப்படுவாய் என்பது (ஏசாயா 62:4). இந்த உலகத்திலுள்ள நம்மைச் சுற்றியுள்ளவர்கள், நம் வாழ்வைக் குறித்துக் கூறும் நிபச்சொல்லை மாற்றுகின்ற வல்லமை நம் தேவனுக்கு உண்டு. வேதத்தில் மூன்று பேருடைய வாழ்வில் காணப்பட்ட நிபச்சொல்லையும், அதை எப்போது அவர்களின் வாழ்வில் தேவன் மாறப்பண்ணினார் என்பதையும் இம்மாதத்தில் தியானிப்போம்.

### 1.ஜெபிக்கும்போது நிபச்சொல்லை மாற்றுவார் (சங். 22:6,7,8):

தாவீதின் வாழ்வில் மனுஷரால் உண்டான நிந்தனைகளும், அவமானங்களும், பரியாசங்களும், வேதனைகளும் (சங். 22:6-8) காணப்பட்டன. இப்படி மற்ற மக்களால் உண்டான நிபச்சொற்கள் தன் வாழ்வை விட்டு மாறும்படி, தாவீது கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்கிறான். தன் ஜெபத்தில் இரண்டு முக்கியமான அறிக்கைகளைச் செய்கிறான். தான் யார் என்பதையும், தன்னுடைய பெலன் யார் என்பதையும் அறிக்கை செய்யும்படியாகக் கர்த்தரை நோக்கி, "நீர் என்னைத் தெரிந்துகொண்டவர் (சங்.22:9) என்றும், நீரே என் பெலன்" (சங்.22:19) என்றும் கூறுகிறான். இந்த விசுவாச அறிக்கை நிறைந்த ஜெபத்தைக் கர்த்தர் கண்டு, அவனுடைய ஜெபத்திற்குப் பதில் கொடுத்தார் (சங்.22:24). தாவீதுக்கு விரோதமாகத் தூஷித்த ஜனங்களுக்கு முன்பாக, ஸ்தோத்திர பலியாகத் தன் பொருத்தனைகளைச் செலுத்தும்படி கர்த்தர் அவன் தலையை உயர்த்தினார். நம் வாழ்விலும் காணப்படும் நிபச் சொற்கள் மாறும்படி, "நீர் என்னைத் தெரிந்துகொண்டீர் (1பேதுரு 2:9) என்பதையும், தேவபெலத்தையே நம்பியிருக்கிறேன் (யோவான் 15:5 பி)" என்பதையும் விசுவாசத்தோடு ஜெபத்தில் அறிக்கை செய்வோம். கர்த்தர் நம்மைச் சாட்சியாக நிறுத்தும்படி, நம் ஜெபத்திற்கும் விண்ணப்பத்திற்கும் நிச்சயமாக செவி கொடுத்து, அவற்றுக்குப் பதில் செய்வார்.

**2.நிலைத்திருக்கும்போது நிபச்சொல்லை மாற்றுவார் (லூக்கா 1:36):**
எலிசபெத்துக்கு இருந்த நிபச்சொல்லை (மலடி) தேவதூதன் மரியாளிடம் சொல்லும்போது பார்க்கிறோம் (1:36). வெளியே இந்த குடும்பத்தைக் குறித்து என்ன பேசியிருப்பார்கள்? ஊழியம் செய்கிற குடும்பம் (1:5), கட்டளைகளைக் காத்து நடக்கும் குடும்பம், குற்றம் சாட்ட முடியாத தேவபக்தியுள்ளவர்கள் (1:6), இப்படியெல்லாம் தேவநீதி உள்ளவர்களாய் இருந்தும் இவர்களின் வாழ்வில் இந்தக் குறைவு காணப்படுவது ஏன்? எனச் சுற்றியுள்ள மற்ற ஜனங்கள் பேசியிருப்பார்கள். இந்த நிபச்சொல்லை தேவனுடைய வேளை வரும்போது மாற்றுகிறார்.

எந்தச் சோதனையிலும் கர்த்தரில் நிலத்திருப்பதே என்கிற தேவசித்தத்தை அறிந்த அவர்கள், முதிர்வயது வரையிலும் கர்த்தருக்காக ஊழியத்தை நிறைவேற்றி அவர் பட்சத்திலேயே சார்ந்து நின்றார்கள். அப்படிப்பட்ட அன்புள்ள பிரயாசத்தை மறக்காத தேவன், தம்முடைய தூதனை ஊழியம் செய்துகொண்டிருந்த சகரியாவிடம் அனுப்பி, அவர்கள் வாழ்வில் காணப்பட்ட நிபச்சொல்லை மாற்றும் நற்செய்தியைக் கூறுகிறார் (1:13). முறுமுறுப்பில்லாமல் எந்தச் சூழ்நிலையிலும் கர்த்தருடைய பட்சத்தில் நாம் நிற்போம். நிபச்சொல்லை மாற்றும் தேவனுடைய வல்ல கிரியையைக் காண்போம்.

**3. கீழ்ப்படியும்போது நிபச்சொல்லை மாற்றுவார் (லூக்கா 23:35,36):**
கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது, அவரைச் சுற்றியிருந்த ஜனங்கள், "மற்றவர்களை இரட்சித்தவருக்குத் தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ள முடியவில்லை" என சொன்னார்கள் (35). போர்ச் சேவகரும், "உன்னை இரட்சித்துக்கொள்" என பரிகசித்தார்கள் (37). குற்றவாளி கூட அவரை இகழ்ந்து பேசினான் (39). இந்த நிபச்சொல்லை எல்லாம் மூன்றாம் நாளில் மாற்றி, தேவன் அவரை உயிரோடு எழுப்பினார்.

இந்த நிபச்சொல் மாறும்படி கிறிஸ்து இயேசு செய்தது என்ன? சிலுவையில் மரண பரியந்தமும் பிதாவாகிய தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்தார் (பிலி.2:8-11). சிலுவையின் பாதை என்றாலும் தேவசித்தத்துக்குத் தன்னை அர்ப்பணிப்பதையே பாக்கியம் என்றெண்ணினார். கர்த்தருக்குக் கீழ்ப்படியும்போது, நம் வாழ்வில் காணப்படும் நிபச்சொல்லையும் மாற்றி நம்மை ஆசீர்வதிப்பார்.

எப்பேர்ப்பட்ட மாற்றமுடியாத காலங்காலமாக உள்ள நிபச்சொல்லுள்ள வாழ்வுடையோராய் இருந்தாலும், நிபச்சொல்லை மாற்றும் சுபாவமுடைய தேவன் இம்மாதத்தில் அவற்றை மாற்றி நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

சில்வியாவிற்கு வயது 22. வீட்டில் அவளுக்கு மகிழ்ச்சியே கிடையாது. பெற்றோரின் திருத்துதல்கள் அவளுக்கு எரிச்சல் மூட்டின. எல்லாவற்றிலும் குறை கண்டுபிடித்தாள். தனது உணவு, தனது அறை, தனக்குக் கொடுக்கப்பட்ட திராம்கள் - எல்லாம்! முறுமுறுத்துக்கொண்டு அழுது கொண்டு தனது அறைக்குள் தன்னைப் பூட்டிக்கொள்வாள். சில்வியா ஒரு அலுவலகத்தில் வேலை செய்தாள்.

சில்வியாவிற்கு அலுவலகத்தில் ஒரு சிநேகிதி உண்டு. அவளது பெயர் நாடியா. அவள் பிரகாசமான ஒரு பெண். எப்போதும் சிரித்துக்கொண்டும், மகிழ்ச்சியாகவும், ஒவ்வொருவருக்கும் ஒரு நல்ல வார்த்தை சொல்லிக் கொண்டும் இருப்பாள். நாடியா எப்படித்தான் இப்படி துடிப்புடன் இருக்கிறாளோ? ஒவ்வொரு நாளும் நான் முகத்தைச் சுளித்துக்கொண்டு வேலைக்கு வருகிறேன். அவளோ சிரித்துக்கொண்டு தேவதூதனைப்போல் வருகிறாள். என்னைப்போல நேரத்தை வீணடிக்காமல் வேலையில் கவனமாய் இருக்கிறாளே என சில்வியா எண்ணினாள்.

ஒருநாள் சில்வியா தன் பெற்றோருடன் கோபித்துக்கொண்டு தன் சூட்கேசுடன் அலுவலகத்திற்குச் சென்றாள். நாடியாவிடம் நான் உன்னோடு வருகிறேன் என்றாள். நாடியாவும் தலையசைத்து சாயங்காலம் சில்வியாவைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். சில்வியாவின் பெற்றோருக்கு அவள் போகுமிடம் தெரிந்ததால் அவர்கள் கவலைப்படவில்லை.

சில்வியாவிற்கு முதல் அதிர்ச்சி - நாடியாவின் வீடு அவர்கள் அலுவலகத்திலிருந்து ஒன்றரை மணி நேர தொலைவில் இருந்தது. அவள் Sharing வீட்டில்தான் வசித்து வந்தாள். வீட்டில் இரண்டு அறைகளும் ஒரு சமையல் கட்டும் இருந்தன. கழிவறை அந்த வீட்டிற்குப் பொதுவானது. நாடியாவின் பாட்டியம்மா சில்வியாவை வரவேற்றார்கள். இரவு சாதமும், ரசமும், பீன்சும் சாப்பிட்டனர். கோழி ரோஸ்டில் காரம் அதிகமாகிவிட்டது என்று அம்மாவைப் பார்த்து கத்தினது சில்வியாவிற்கு நினைவிற்கு வந்தது. நாடியாவிற்குத் தாயும் தகப்பனும் இரண்டு சகோதரிகளும் இருந்தனர். அவர்கள் இந்தியாவில் வசித்து வந்தனர். குடும்ப கஷ்டத்தின் காரணமாக அவள் துபாய்க்கு வேலைக்கு வந்திருந்தாள். பின்னர் ஆறு மாதத்திற்குப் பின் தன் பாட்டியைத் தனக்குத் துணையாக இருக்கும்படி அழைத்து வந்திருந்தாள்.

நாடியா தன் பாட்டியின் கட்டிலை சில்வியாவிற்குக் கொடுத்துவிட்டு தன் பாட்டியோடு தரையில் படுத்துக்கொண்டாள். காலையில் Sharing வீட்டில் இருந்த வீட்டின் உரிமையாளர் சமையல் கட்டிற்குச் சென்று சமைப்பதற்கு முன், நாடியாவின் பாட்டி அவர்கள் இருவருக்கும் சமையல் செய்து கொண்டிருந்தார்கள். அது அதிகாலை ஐந்து மணி. சில்வியா குடியிருப்பது Three bedroom flat. நினைத்த நேரத்தில் சமையல் கட்டுக்குச் செல்லலாம். சில்வியா வீட்டிலிருந்து அவள் அலுவலகமும் 10 நிமிட தொலைவிலேயே இருந்தது. இதையெல்லாம் சில்வியா படுத்துக்கொண்டே சிந்தித்தாள்.

காலையில் பாத்திரங்களைக் கழுவிக்கொண்டே நாடியா ஜன்னல் வழியாகப் பார்த்து, "சூரியோதயத்தைப் பார். எத்தனை அழகு!" என்றாள். நான் ஏன் சூரியன் உதிப்பதைக் கவனிக்கவே இல்லை எனச் சிந்தித்தாள். சில்வியாவும், நாடியாவும் கேழ்வரகு கஞ்சி குடித்துவிட்டு அலுவலகத்திற்குப் புறப்பட்டனர். மூன்று நாட்கள் கழித்து சில்வியா தன் வீட்டிற்குச் சென்றாள். வீடு முன்போல கொடூரமாகக் காணப்படவில்லை. பெற்றோர் அன்பாகத் தென்பட்டனர். அவளது எரிச்சல் பஞ்சாய்ப் பறந்துபோனது.

கொஞ்சத்தோடு கூட சந்தோஷமாகவும் இருக்கலாம், அதிகத்தோடு கூட சோகமாகவும் இருக்கலாம். ஆண்டவர் உங்களுக்குக் கொடுத்திருப்பவைகளைப் பாராட்டி நேசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

**வேதவாசிப்புப் புகுதி :** பிலிப்பியர் 4:8-13
**மனப்பாட வசனம் :** 1 கொரிந்தியர் 10:10

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃபர் ஆல்வின்
உதவி ஆயரம்மா.

## MEMORY VERSE CONTEST - 2017

**The Memory Verse Contest for the year 2017 will be conducted on 15th September 2017. Please download the memory verses (Grade wise) from our church website and make the children LEARN AND BE BLESSED.**

# செயலர் மடல்

நம்முடைய தேவனின் அனாதி திட்டத்தின்படி இமைப்பொழுதும் வழுவாதபடி நம்மைக் காத்து வழிநடத்தி வருகிற தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.

கடந்த ஜூன் மாதம் 23ஆம் தேதி முதல், விடுமுறையை இங்கே கழிக்கும் நமது சிறார்களுக்கு திரு. ஜூலியன் சுதர்சன் அவர்கள் தலைமையில் இயேசுவுக்காக எழுந்து நிற்பேன் (Stand Up for Jesus) என்ற கருப்பொருள் கொண்ட கோடை முகாம் (Summer Camp) நடைபெற்றது. அவர்களோடு இணைந்து செயல்பட்ட ஆசிரியர்களுக்கும், தன்னார்வத் தொண்டர்களுக்கும் திருச்சபையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விடுமுறைக்குத் தாயகம் மற்றும் பிற இடங்களுக்கும் சென்று சுகபத்திரமாக இத்தேசத்திற்குத் திரும்பியவர்களைத் தங்கள் தொழில் மற்றும் உத்தியோகத்தில் மறுபடியும் தொடரச்செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். இன்னும் இத்தேசத்திற்கு திரும்ப ஆயத்தமாகிறவர்களுக்குத் தேவன் சுக பிரயாணத்தை அருள வேண்டுகிறேன். உங்கள் விடுமுறைக் காலங்கள் பரிசுத்தம் நிறைந்த மகிழ்ச்சியையும், தேவசமாதானத்தையும் தந்திருக்கும் என்று கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

ஆகஸ்டு மாதம் 11ஆம் தேதி அன்று நமது தாய்த்திருநாட்டின் 70வது சுதந்தர தினத்தை முன்னிட்டு நம் திருச்சபையில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. சபையார் நமது இந்திய தேசத்திற்காகவும், நமது தேசத்தின் தலைவர்களுக்காகவும் சிறப்பு ஜெபவிண்ணப்பம் செய்தார்கள். தொடர்ந்து சபையார் நமது தேசத்திற்காகவும், ஆளுநர், குடிமக்கள் அனைவருக்காகவும் மற்றும் நமது தேசத்தின் எழுப்புதலுக்காகவும் உங்கள் தனி ஜெபம் மற்றும் குடும்ப ஜெபங்களில் தேவனிடம் மன்றாட வேண்டுகிறேன். இந்த ஜெபபாரத்தை உங்கள் சந்ததிக்கும் கற்றுக்கொடுக்க வேண்டுகிறேன்.

இவ்வருட அறுப்பின் பண்டிகையை முன்னிட்டு, நமது திருச்சபையின் ஜெபக்குழுக்கள் மற்றும் ஐக்கியங்கள் சார்பாக வாரந்தோறும் உணவு விற்பனை மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதற்காக செயல்பட்டு வருகிற பொறுப்பாளர்களுக்கும் அவர்களோடு இணைந்து செயல்படுகிற அனைத்து திருச்சபையின் அங்கத்தினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வருடம் நமது அறுப்பின் பண்டிகையை ஒரு பாரம்பரிய விழாவாகக் (Traditional Festival) கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளது. தாய்நாட்டிற்குச் சென்று வருவோர், நம் நாட்டின் பாரம்பரிய உபயோகப் பொருட்களைச் சேகரித்து நமது அறுப்பின் பண்டிகைக்குப் படைக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். நமது இளம் தலைமுறையார்களுக்கு அறுப்பின் பண்டிகையின் பாரம்பரியத்தை

நினைப்பூட்டுவதற்கு, வேத அடிப்படையிலான ஒரு நினைவு புத்தகத்தை வெளியிட உள்ளோம். சபையார் இதற்காக ஊக்கமாக ஜெபிக்கவும், கொடுக்கவும், ஆர்வமாக அனைத்து நிகழ்வுகளிலும் பங்குபெறவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கின்றேன். இதற்கான முழு விவரங்களையும் நமது இணையதளம் மற்றும் அடுத்த தூதன் இதழில் வெளியிட உள்ளோம்.

செப்டம்பர் மாதம் அனைத்து வாரங்களிலும் நமது திருச்சபையில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற உள்ளது. சபையார் தவறாது ஜெபத்தோடு பங்குபெற்று தேவ ஆசிபெற அன்போடு வேண்டுகிறேன்.

Jernaus Britto, Secretary.

## NEW MEMBERS LIST

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mr. D.Robin | 2723 | RAK |
| 2 | Mr. Nelson Jagatheesan | 2724 | RAK |
| 3 | Mr. John Joseph J | 2725 | RAK |
| 4 | Mr. Kiruba Johnson | 2726 | RAK |
| 5 | Mr. Ajayan | 2727 | RAK |
| 6 | Mr. Gabriel Andrews | 2728 | Dubai |
| 7 | Mr. Benet Raj S | 2729 | Dubai |
| 8 | Mr. Nickson Selvaraj S | 2730 | Dubai |
| 9 | Mr. Henry Vivian S | 2731 | Dubai |
| 10 | Mr. Jeya Chandra Moses | 2732 | Dubai |
| 11 | Mr. N.John Kingsley | 2733 | Dubai |
| 12 | Mr. Theodore Kirupakaran | 2734 | Dubai |
| 13 | Mr. T.Selva Sam Daniel | 2735 | Dubai |
| 14 | Mr. Ranjith Raj | 2736 | Dubai |
| 15 | Mr. Bright Jhony | 2737 | Dubai |
| 16 | Mr. Ranjith Singh | 2738 | Dubai |
| 17 | Mr. P.Amose | 2739 | Dubai |
| 18 | Mr. Rajaselvan Swamynathan | 2740 | FUJ |
| 19 | Mr. Berlik Jacob | 2741 | Dubai |
| 20 | Mr. J.Joshua Alexander | 2742 | Dubai |
| 21 | Mr. Vimal Harrison James | 2743 | Dubai |
| 22 | Mr. Renjith Dhas | 2744 | Dubai |

# ஆராதனை பாடல்கள் - செப்டம்பர் 2017

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : பாமாலை 11 சேனையின் கர்த்தா
ஆராதனை இறுதி கவி : கீர்த்தனை 33 வந்து நல்வரம் தந்த

**01-09-2017**

| | | |
|---|---|---|
| பாமாலை | 151 | யுத்தம் செய்வோம் வாரும் |
| பாமாலை | 142 | தீயோர் சொல்வதைக் கேளாமல் |
| கீர்த்தனை | 98 | மகனே உன் நெஞ்செனக்குத் |
| கீர்த்தனை | 187 | கர்த்தரின் பந்தியில் வா |
| பாமாலை | 175 | கர்த்தரின் மாம்சம் |

**08-09-2017**

| | | |
|---|---|---|
| பாமாலை | 2 | அலங்கார வாசலாலே |
| கீர்த்தனை | 102 | இரங்கும், இரங்கும் |
| பாமாலை | 119 | இரட்சா பெருமானே பாரும் |
| கீர்த்தனை | 40 | இவரே பெருமான், மற்ற |
| கீர்த்தனை | 77 | வரவேணும் எனதரசே |
| கீர்த்தனை | 56 | இயேசுவின் நாமமே திருநாமம் |

**15-09-2017**

| | | |
|---|---|---|
| பாமாலை | 152 | விண்கிரீடம் பெறப் போருக்கு |
| பாமாலை | 178 | தீராத தாகத்தால் |
| கீர்த்தனை | 132 | எல்லாம் இயேசுவே |
| கீர்த்தனை | 155 | வாரா வினை வந்தாலும் |
| கீர்த்தனை | 156 | என்ன என் ஆனந்தம் |

**22-09-2017**

| | | |
|---|---|---|
| பாமாலை | 130 | நிரப்பும் என்னைத் துதியால் |
| பாமாலை | 134 | அருள்நாதா நம்பி வந்தேன் |
| பாமாலை | 189 | அன்புருவாம் எம் ஆண்டவா |
| கீர்த்தனை | 199 | காப்பார் உன்னைக் காப்பார் |
| கீர்த்தனை | 200 | மறவாதே, மனமே, தேவ சுதனை |
| கீர்த்தனை | 201 | வந்தனம், வந்தனமே, தேவ |

**29-09-2017**

| | | |
|---|---|---|
| பாமாலை | 166 | சபையின் அஸ்திபாரம் |
| பாமாலை | 100 | பாவி கேள் உன் ஆண்டவர் |
| பாமாலை | 163 | ஆ சகோதரர் ஒன்றாய் |
| கீர்த்தனை | 128 | அன்பே பிரதானம் - சகோதர |
| கீர்த்தனை | 129 | அன்பே அன்பே அன்பே |
| கீர்த்தனை | 134 | தேன் இனிமையிலும் ஏசுவின் |

# நீங்கள் கிறிஸ்தவரா...

என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன். யாத்திராகமம் 20:6.

உலகுக்கும்
அப்பால்
மேன்மையான
ஒரு ஆன்மீக
உலகம் உள்ளது.
அதுவே
வரம்பில்லாத
மெய்ப்பொருள்
உறையும்
உன்னதங்களின்
உன்னதம்... அவ்
விருப்பிடம்
அடைந்தவர்
இந்த பூமிக்குத்
திரும்புவதில்லை.
இப்.. பிரபஞ்சம்
முழுதும்
அழிந்தாலும்கூட
அப்பகுதி
அழியாத
மேலோங்கிய
ஆன்மீகத்தலம்
இதுவே...
ஆதியும் அந்தமும்
அற்றதாகும்.
அனைவரின்
ஆத்மாவின்
இறுதிப்புகலிடம்.
பிறப்பு
இறப்பு..பிணி
மூப்பு - போன்ற
துன்பங்கள்
அங்கில்லை.
துக்கத்தின்
அழிவும்
நிலைத்த
இன்பமும்
சொர்க்கத்தின்
வாழ்வும்
பரம் என்னப்படும்
இதுவே...
கர்த்தரின்
திவ்விய
திருத்தலம்
நாம்.. நம்
வருங்கால
சந்ததியினருக்காக
உண்ணாது
உறங்காது
பாடுபட்டு
அடுக்குமாடி
குடியிருப்போ
அளப்பெரிய
செல்வமோ
சம்பாதித்து
வைக்க வேண்டாமே..
உடலால்
மனதால்
உள்ளத்தால்
கர்த்தரை
அன்றாடம்
அடிபணிந்து
அவர்
பொற்பாதம்
பற்றுவோமே...
நன்றிப்
பெருக்கால்
நாள்தோறும்
பாடி, துதித்து
ஜெபித்து
இயேசுவை
கனம் பண்ணி
வாழ்வோமே...
கர்த்தர்...
அருளிய பத்துக்
கட்டளைகளையும்
வேதம் கூறும்
அறநெறிகளையும்
ஒழுக்கமும் மூடி
இயேசுவின் மீது
அன்பு கூர்ந்து
அடிமையாய்
வாழ்வோமே..
இதன் பலன்
ஒன்றா... இரண்டா...
ஓராயிரம்
தலைமுறைக்கும்
கர்த்தரின்
இரக்கம் இரட்சிப்பு
இடரின்றி தொடருமே...
தான் படைத்த
மனிதருக்காக
தயை காட்டும்
தயாபரன்.. நம்
கர்த்தர்
உணர்க..
உடல் தந்த
அதில்
உயிர் தந்த
அதன்
உரிமையாளரே
கர்த்தர்
இதை அறிவதே
ஞானம்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# தெரிந்த சத்தியம்! தெரியாத உண்மை!!

## யாக்கோபு

யாக்கோபு ஏசாவிடம் தூதுவர்களை அனுப்பி, தன்னுடைய வாழ்நாளில் 20 வருடம் தான் லாபானை சேவித்ததைப் பற்றியும், அவர் தன் சம்பளத்தை சுமார் 10 முறை மாற்றியதைப் பற்றியும், தன்னுடைய அயராத உழைப்பினிமித்தம் தேவன் தன்னை பன்மடங்காக பலுகிப் பெருகி ஆசீர்வதித்திருப்பதைப் பற்றியும், விவரித்துக் கூறச்செய்தார். ஏசா அதற்கு பிரதியுத்திரமாக, "யாக்கோபு லாபானுக்கு செய்ததையும் அறிவேன். அவன் லாபானுக்கு விரோதமாக தன்னை உயர்த்தியதையும், அவரது குமாரத்திகளை அவருக்கு விரோதமாகத் திருப்பி, அவர்களையும் கூட்டிக்கொண்டு வந்ததையும் அறிவேன். லாபானை மட்டுமன்றி, என்னையும் இருமுறை ஏமாற்றி வஞ்சித்ததையும் நான் அறிவேன். நான் எப்படி இப்போது அமைதியாக இருக்கமுடியும்? நான் என் இருதயத்திற்கு விருப்பமானதை அவனுக்குச் செய்வேன்" என்றார். தூதுவர்கள் யாக்கோபிடம் திரும்பி வந்து, "நீர் கூறிய வார்த்தைகளை நாங்கள் உம்முடைய சகோதரனாகிய ஏசாவிடம் கூறினோம். அவர் உம்மோடு போர் செய்ய 400 பேர்களோடு எதிர்கொண்டு வருகிறார். இப்போது நீர் உம்மை ஏசாவின் கைக்கு விலக்கி விடுவிக்க உம் தேவனாகிய கர்த்தரிடம் முறையிடவேண்டும்" என்றார்கள். இதைக் கேட்ட யாக்கோபு மிகவும் பயந்ததுமன்றி மிகவும் கலங்கினார்.

யாக்கோபு தேவனாகிய கர்த்தரை நோக்கி, "ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனுமாகிய என் பிதாக்களின் தேவனே, உம்முடைய சொற்படி இந்த தேசத்திலே வந்து சேர்ந்தேன். லாபானின் கைக்கு விலக்கி மீட்டு, என்னை ஏசாவின் கையிலே விழச் செய்தீரோ? என் தேவனே என்னை என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு விலக்கி, என் பயத்தை நீக்கி, என்னை விடுவித்தருளும். உம்முடைய தயவு மற்றும் காருண்யத்தாலே இவற்றையெல்லாம் சுதந்தரித்தேன். உம்முடைய இரக்கத்தினாலே எனக்கு பதிற் செய்யும்" என்றார். பின்பு யாக்கோபு சீக்கிரமாக எழுந்திருந்து, தனக்குச் சொந்தமான எல்லாவற்றையும் குமாரர் மற்றும் விலங்கினங்கள் யாவற்றையும் இரண்டு பகுதிகளாகப் பிரித்து, ஒன்றை ஆபிரகாமின் வேலைக்காரன் எலியேசரின் குமாரன் தமசேக்கிடமும் மற்ற பகுதியை அவன் சகோதரனாகிய எலியேனஸிடமும் கொடுத்தார். "நீங்கள் இருவரும் பிரிந்து வெகு தூரம் சென்றுவிடுங்கள். ஏசா வந்து உங்களைத் தாக்கினால் அவரைக் கொன்று போடுங்கள். மற்ற பகுதியாவது தப்பித்துக்கொள்ளும்" என்றார். அன்றிரவு முழுவதும் யாக்கோபு தன் குமாரருக்கும் வேலையாட்களுக்கும் ஆலோசனைகள் வழங்கிக்கொண்டிருந்தார்.

தேவனாகிய கர்த்தர் யாக்கோபின் விண்ணப்பத்தின் சத்தத்தைக் கேட்டார். அவர் மூன்று தேவதூதர்களை வானத்திலிருந்து அனுப்பினார். அவர்கள் 2000 பேராக வந்து ஏசாவின் முன்பாகவும், அவரது 400 பேர் முன்பாக நான்கு அணிவகுப்பாக பிரிந்து நின்றார்கள். அவர்களைப் பார்த்து ஏசாவோடிருந்த அனைவரும் சிதறி ஓடினார்கள். அந்த தூதர்கள் ஏசாவை நோக்கி, “மெய்யாகவே நாங்கள் தேவனாகிய கர்த்தருடைய ஊழிக்காரனாகிய யாக்கோபின் ஊழியக்காரர்கள். எங்களுக்கு எதிர்த்து நிற்பவன் யார்?” என்றார்கள். ஏசா அவர்களைக் கண்டு மிகவும் பயந்து நடுங்கினார். அதனால் அவர் யாக்கோபோடு சமாதானமாக சென்றுவிட தீர்மானித்தார்.

யாக்கோபோ ஏசாவிடம் ஒரு பரிசை கொடுக்கத் தீர்மானித்தார். அவருக்காக தனது மந்தையிலிருந்து 240 ஆடுகளை தெரிவு செய்து, 30 ஒட்டகங்களையும், 30 கழுதைகளையும் 50 மாடுகளையும் அவைகளை பத்து கூட்டமாக பிரித்து, அவைகளை 10 வேலைக்காரரிடம் கொடுத்து அவைகளை ஏசாவை எதிர்கொண்டு போகச் செய்தார். இவைகள் தன் சகோதரன் ஏசாவுக்கு யாக்கோபு கொடுத்து அனுப்பியவை என்று சொல்லச் சொன்னார். அவர் உங்களை நோக்கி யாக்கோபு எங்கே என கேட்டால், அவர் மகிழ்ச்சியோடு தங்களைச் சந்திக்க பின்னால் வந்துகொண்டிருக்கிறார் என்று சொல்லச் சொன்னார்.

யாக்கோபு யாப்போக்கு நதியண்டையில் அன்றிரவு தங்கியிருந்த போதுதான் தேவனோடு போராடி ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டார். மறுநாள் யாக்கோபு தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்த போது, இதோ ஏசா வருவதை பார்த்தார். தன்னுடைய மகள் தீனாளை ஒரு பெட்டிக்குள் மறைத்து வைத்துக்கொண்டு ஏசாவை சந்திக்கச் சென்றார். தேவன் யாக்கோபிற்கு ஏசாவின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்தார். ஏசாவின் கோபம் யாக்கோபின்மேல் அன்பாக மாறியது.

தொடரும்....

நன்றி: யாசேரின் புத்தகம்

தொகுப்பு & தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## NEW ARRIVAL

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Nathaniel Kiruba Kitson

S/o.Mr.Kitson Davidson & Mrs.Divya Susan Kitson

01-07-2017

# கரடி

இந்தியாவில் அநேகமாக எல்லா மலைக் காடுகளிலும் கரடிகள் வாழ்கின்றன. கரடிகள் இலை, தழைகள் மற்றும் மாமிசம் உண்ணும். இவை தேன் மற்றும் நாவற்பழம் போன்றவற்றை விரும்பி உண்ணும். இவை மிகவும் வலிமை வாய்ந்தவை. இதன் கால் நகங்கள் மிகவும் கூர்மையானவையாகும். பெரிய கரடிகள் ஒரு காட்டுமாட்டை ஒரே அடியில் வீழ்த்திவிடும். கரடிகள் இயல்பாக சாதுவானவை, ஆனால் தனக்குத் தீங்கு வரும் என்று உணர்ந்துகொண்டால் எதிரியை விலங்கானாலும் மனிதர்கள் ஆனாலும், பீறிக் கடித்துக் குதறிவிடும். மனிதர்களை உணவுக்காக தாக்குவதில்லை. குட்டிகளுக்கு ஆபத்தென்றால் தாக்கும். இதைத்தான் 2சாமு.17,18 அதிகாரங்களில் தாவீதின் மகனாகிய அப்சலோம், தாவீதுக்கு விரோதமாக யுத்தத்திற்கு புறப்படும் சம்பவத்தில், ஊசாய் அப்சலோமிடம் "உம்முடைய தகப்பனும் அவன் மனுஷரும் பலசாலிகள் என்றும், வெளியிலே குட்டிகளைப் பறிகொடுத்த கரடியைப்போல மனமெரிகிறவர்கள் என்றும் நீர் அறிவீர்" எனக் கூறினான். அதேபோல் தாவீதின் படைத்தலைவன் யோவாபினால் அப்சலோம் கொல்லப்பட்டான். இஸ்ரவேல் ஜனங்கள் விக்கிரக வணக்க விஷயத்தில் அதிகமதிகமாய் பாவஞ்செய்தனர். இஸ்ரவேலர் தங்கள் புத்திக்கேற்ப விக்கிரகங்களை உண்டுபண்ணி பலியிட்டு என்னை மறந்து போனபடியினால் "குட்டிகளைப் பறிகொடுத்த கரடியைப்போல நான் அவர்களை எதிர்த்து, அவர்கள் ஈரற் குலையைக் கிழித்து..."(ஓசியா 13:8) அவர்களைப் பட்சித்துப் போடுவேன் என்று கர்த்தர் உரைத்தார். நாம் எவைகளை விக்கிரகங்களாக சேவிக்கிறோம்? "விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக் காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரம் அடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே" (எபே 5:5) என பொருளாசைக்காரனை விக்கிரகாராதனைக்காரன் என்று பவுல் கூறுகிறார். கொலோசேயர் 3:5லும் இதை வலியுறுத்துகிறார். மேலும் நீதி 17:12ல் "தன் மதிகேட்டில் திரியும் மதியீனனுக்கு எதிர்ப்படுவதைப் பார்க்கிலும், குட்டிகளைப் பறிகொடுத்த கரடிக்கு எதிர்ப்படுவது வாசி" என பார்க்கிறோம். மதியீனன் இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், பொய்சாட்சிகளும் வரும், அவன் இருதயம் அநியாயத்தை நடப்பிக்கும் என்றும் வேதம் கூறுகிறது. ஓரிசாவில் மருத்துவப்பணி செய்து இந்திய மக்களுக்கு தொண்டாற்ற வந்த ஸ்டேன்ஸ் என்ற ஊழியர் தன் இரண்டு மகன்களோடே உயிரோடே எரித்து கொல்லப்பட்ட செயலை உலகமே பழித்ததை அறிவோம். மேலும், "ஏழை ஜனங்களை ஆளும் துஷ்ட அதிகாரி கெர்ச்சிக்கும் சிங்கத்துக்கும் அலைந்து திரிகிற கரடிக்கும் ஒப்பாயிருக்கிறான்"(நீதி 28:15). இன்றைய நாட்களில் நம் தமிழகத்தில் விவசாயிகள் இன்னும் பலர் பாதிக்கப்பட்டிருப்பதை காணலாம்.

நம் கிறிஸ்தவ சமூகத்தில் கூட ஓய்வு நாட்களிலும் வேலை வாங்குவதும், அவர்களுக்குரிய ஊதியம் கொடுக்கப்படாமல் அநேகநேரம் வேலை வாங்குவதும், கடனுக்கு வட்டி செலுத்துவதும் போன்ற செயல்களை காண்கிறோம். அன்று நெகேமியாவிடம் இஸ்ரவேல் ஜனங்கள் முறையிட்ட பெரிய கூக்குரல் என்னவென்றால், நாங்கள் சாப்பிட்டு பிழைக்கும்படிக்கு தானியத்தை கடனாக வாங்கியதால் எங்கள் குமாரரையும், குமாரத்திகளையும் அடிமைதனத்திற்கு உட்படுத்த வேண்டிய தாயிருக்கிறது என்றனர். நெகேமியா அன்று பிரபுக்கள் அதிகாரிகளை நோக்கி, "நீங்கள் நம்முடைய தேவனுக்குப் பயந்து நடக்க வேண்டாமா?" (நெகே 5:9) என எச்சரித்தார். மற்றும் "அவர்களிடத்தில் தண்டிவருகிற வட்டியையும் அவர்களுக்குத் திரும்பக் கொடுத்துவிடுங்கள்" (நெகே 5:11) என்றார். சங்கீதம் 15 ல் தன் பணத்தை வட்டிக்கு கொடாதவன் கர்த்தருடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான் என கூறப்பட்டுள்ளது. நாமும் தேவனுக்கு பயந்து நம் சகோதர சகோதரரிடம், "உன்னிடத்தில் நீ அன்புகூறுவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூறுவாயாக"(மத் 22:39) என்ற கற்பனைக்கேற்றபடி நடக்க இயேசுவானவர் அறிவுறுத்துகிறார். இன்றைய உலக நிகழ்வுகளில் அமைதி இல்லை. நியாயம் தூரம் போயிற்று. அதை ஏசாயா தீர்க்கன் 59:11ல் "நாங்கள் அனைவரும் கரடிகளைப் போல் உறுமி ... நியாயத்துக்கு காத்திருந்தோம், அதை காணோம்" என இஸ்ரவேல் ஜனங்களின் மீறுதல்களை கூறுகிறார். 2இராஜாக்கள் 2ம் அதிகாரத்தில் ஒரு நிகழ்வினை பார்க்கிறோம். எலிசா தீர்க்கதரிசியைப் பார்த்து வழியில் விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகள், மொட்டைத்தலையா ஏறிப்போ, என்று சொல்லி கேலியும் பரிகாசமும் செய்து நிந்தித்தார்கள். அதிர்ச்சியடைந்த எலிசா அவர்களைச் சபித்தான். "உடனே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் புறப்பட்டு வந்து, அவர்களில் நாற்பத்திரண்டு பிள்ளைகளைப் பீறிப்போட்டது" (2இரா 2:24). "நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக: நான் கர்த்தர்" (லேவி 19:32). நாமும் வயதில் முதிர்ந்தவர்களை மதித்து நடக்க வேண்டும் என வேதம் நமக்கு போதிக்கிறது. சங்கீதக்காரன் கூறியபடி பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமல், "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் ... அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" (சங் 1:2,3) என்ற வாக்கின்படி அவருக்கு பயந்து, அவர் கட்டளைகளுக்கு கீழ்படிந்து வாழவும், அவ்வாறு வாழ்வதின் மூலமாய் வரும் ஆசீர்வாதத்தை நாம் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள தேவன் கிருபை செய்வாராக.

தீயவர் திருடரும் கொடியவர் கொலைஞரும் இயேசுவில் மாற்றம் பெற்றார்
மாறிய மனதுடன் மங்கள வாழ்வுக்கு அழைக்கிறார் ஓடியே வா

இனிதா மோசஸ்

# திருச்சபை ஜெபநாள் 03-09-2017 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்;
நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும்...." சங்கீதம் 31:17

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- விடுமுறைக் காலங்களில் கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காகவும், Summer Camp சிறப்பாக நடைபெறச் செய்த கரிசனைக்காகவும் அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
